23.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்கடன்: அமைச்சர் கே. ராஜு

நிகழாண்டில் ரூ.6,500 கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மே மாதம் வரையில் ரூ.186.81 கோடி வழங்கப்பட்டுவிட்டது என்றார் கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் கே. ராஜு.

தமிழகத்தில் 2-ம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தும் வகையில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 50,94,636 விவசாயிகளுக்கு ரூ.23,214.24 கோடி பயிர்க்கடன் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 8,28,080 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.3,236.22 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு (2016-2017) ரூ.6,500 கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 31.05.2016 வரை 31,036 விவசாயிகளுக்கு ரூ.186.81 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் 1,196 நியாய விலைக்கடைகள் உள்ளன. இக்கடைகளில் அனைத்து வியாபார நடவடிக்கைகளும், காகிதம் இல்லா வகையில் விற்பனை முனைய இயந்திரம் மூலம் கணக்குகள் பராமரிக்கப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு கைபேசி மூலம் பொருட்கள் விற்பனை குறித்து குறுஞ்செய்தி அனுப்பப்படுவதால் பொதுமக்களிடம் இத்திட்டம் வரவேற்கப்படுகிறது. ஏழை எளிய மக்களின் பசியை போக்கும் மகத்தான திட்டத்தின் கீழ் அரிசி மற்றும் அத்தியாவசிய பொருட்களை, 1.85 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் பணியினை கூட்டுறவுத்துறை சார்ந்த 32,514 நியாய விலைக்கடைகள் மேற்கொண்டு வருகின்றன என்றார்.

## அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி, சுற்றுலா

அட்மா திட்டத்தின் கீழ் ரூ. 40 லட்சம் மதிப்பில் வேளாண் தொழில்நுட்ப பயிற்சி, கண்டுணர் சுற்றுலா திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இதில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பங்கு பெற ஆட்சியர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: அரியலூர் மாவட்டம், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில் 2016-17 ஆம் ஆண்டுக்கான மாவட்ட அளவிலான வேளாண் விரிவாக்க செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில்,விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளித்திட ரூ.31.50 லட்சம் மற்றும் 26 கண்டுணர் சுற்றுலாவுக்கு ரூ. 8.84 லட்சம் என மொத்தம் 40.34 லட்சம் நிதி கோரப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சி: வெளி மாநில அளவிலான பயிற்சியில் 20

விவசாயிகளுக்கு 5 நாள் பயிற்சி அளிக்கப்படும். மாநில அளவிலான பயிற்சியில் 200 விவசாயிகளுக்கு 3 நாள் பயிற்சி அளிக்கப்படும். மாவட்ட அளவிலான பயிற்சியில் 9,200 விவசாயிகளுக்கு வேளாண் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலம் ஒரு நாள் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கண்டுணர் சுற்றுலா: வெளிமாநில சுற்றுலா,மாநில அளவிலான சுற்றுலா மற்றும் மாவட்ட அளவிலான சுற்றுலா என 3 பிரிவுகளாக திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு 2016-17 ஆம் ஆண்டில் மாவட்டத்தில் அட்மா மூலம் 9,440 விவசாயிகள் பயிற்சி வகுப்புகள், 1,240 விவசாயிகள் கண்டுணர் சுற்றுலாக்கள் மூலமாக புதிய விவசாயத் தொழில் நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது.

விவசாயி ஏதேனும் ஒரு இனத்தில் மட்டுமே கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படும். ஆதிதிராவிட விவசாயிகள்,சிறு,குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். எனவே, ஆர்வமுள்ள விவசாயிகள் தங்களது பெயர், முகவரியை ஆட்சியர் அலுவலக 2 ஆவது தளத்தில் செயல்பட்டு

வரும் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முகநூல், சுட்டுரையில் ரப்பர் விவசாய தொழில்நுட்பத் தகவல் பெறலாம்'

ரப்பர் வாரியம் முகநூல் மற்றும் சுட்டுரையில் (பேஸ் புக், டுவிட்டர்) கணக்கு தொடங்கியுள்ளது. இதன் மூலம் ரப்பர் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த தகவல்களை விவசாயிகள் எளிதில் பெறலாம்.

இதுகுறித்து, ரப்பர் வாரிய மார்த்தாண்டம் அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பு:

ரப்பர் வாரியம் அலுவலக முறையிலான முகநூல் மற்றும் சுட்டுரை கணக்குகளை வியாழக்கிழமை முதல் தொடங்கியுள்ளது. இதனை வாரியத் தலைவர் அஜித்குமார் தொடங்கிவைத்தார். இதன் மூலம் ரப்பர் வாரியத்தின் பல்வேறு வகையான செயல்பாடுகள், விவசாயிகளுடனான கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படும். மேலும், முக்கியமான கருத்தரங்கங்கள், ரப்பர் விவசாயம் தொடர்பான தகவல்கள், பூச்சி மருந்துகள், நோய்கள், பயிற்சி முகாம்கள் உள்ளிட்ட தகவல்கள் மற்றும் வானொலி, தொலைக்காட்சி அறிவிப்புகள் உள்ளிட்டவை வெளியிடப்படும். இது தொடர்பாக ரப்பர் வாரியத்தின் https:www.facebook.comrubberboard; https:twitter.comrubberboard ஆகிய கணக்குகளில் விவசாயிகள் இணைந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வைகை அணை நீர்மட்டம் உயர்வு

வைகை அணைக்கு கடந்த ஜூலை 14 ம் தேதி முதல் நீர்வரத்து இல்லை. இதனால் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வந்தது. இந்நிலையில் முல்லைப் பெரியாறு அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டதால் வெள்ளிக்கிழமை வைகை அணைக்கு 164 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. இதனால் வைகை அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து 26.25 அடியாக உள்ளது.

## இயந்திர நெல் நடவுக்கு மானியம்: ஆனைமலை வட்டார வேளாண் அதிகாரிகள் தகவல்

இயந்திர முறை நெல்நடவு செய்தால் ஹெக்டேருக்கு ரூ. 5,000 மானியம் வழங்கப்படும் என ஆனைமலை வட்டார வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆழியாறு பழைய ஆயக்கட்டு கால்வாய் பாசனப் பகுதியில் 1,250 ஹெக்டேர் பரப்பில் ஆனைமலை சுற்றுப்பகுதியில் நெல்சாகுபடி செய்யப்படுகிறது. நெல் நடவுப் பணிக்கு ஆள்கள் பற்றாக்குறை இருந்து வருவதால், இயந்திர நெல்சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு வேளாண் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

ஒரு ஹெக்டேரில் இயந்திர நெல்சாகுபடி செய்ய ரூ. 9,500 வரை இயந்திரத்திற்கு வாடகையாக விவசாயிகள் கொடுக்கவேண்டியுள்ளது. அதனால், விவசாயிகளின் சிரமத்தை குறைக்க ஹெக்டேருக்கு ரூ. 5,000 மானியத்தை வேளாண்துறை விவசாயிகளுக்கு வழங்குகிறது. ஓர் ஆண்டுக்கு ஒரு போகத்திற்கு மட்டும் இந்த மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து ஆனைமலை வட்டார வேளாண்துறை அதிகாரிகள் கூறுகையில், "தற்போது ஆனைமலை வேளாண்துறை அலுவலகத்தில் முன்னுரிமை பதிவேட்டில் விவசாயிகள் பட்டா, சிட்டா, அடங்கல் போன்றவற்றை கொண்டு வந்து பதிவு செய்துகொண்டால் இயந்திர நடவுக்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும்' என்றனர்.

## 29-இல் வேளாண் குறைகேட்புக் கூட்டம்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண் குறைகேட்புக் கூட்டம் ஜூலை 29-ஆம் தேதி காலை 11 மணி அளவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம், ஆட்சியர் எஸ்.பிரபாகர் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில், காலை 11 முதல் 11.30 மணி வரை விவசாயிகள் தங்களது கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். 11.30 முதல் 12.30 மணி வரை விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகள் குறித்து பேசலாம். 12.30 முதல் 1.30 மணி வரை அதிகாரிகள் தங்களது பதில்களை அளிப்பார்கள் என மாவட்ட ஆட்சியர் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

## இயந்திரம் மூலமாக நெல் நடவு செய்ய மானியம்

இயந்திரத்தின் மூலமாக நெல் நடவு செய்வதற்கு ஹெக்டருக்கு ரூ. 5,000 மானியம் வழங்கப்படுகிறது.

கோபி மற்றும் சுற்றுப் பகுதிகளில் தடப்பள்ளி, அரக்கன் கோட்டை பாசனப் பகுதிகளில் அதிக அளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயப் பணிக்கு போதிய ஆள்கள் கிடைக்காத நிலை உள்ளது. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையிலும், நெல் சாகுபடியில் கூடுதல் மகசூல் எடுக்கவும் வேளாண்மை துறை அதிகாரிகள் விவசாயிகளிடையே திருந்திய நெல் சாகுபடி முறை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

திருந்திய நெல் சாகுபடி முறைக்கு அரசு மானியமும் வழங்கப்படுகிறது.

இது குறித்து கோபி வேளாண்மை உதவி இயக்குநர் பழனிசாமி வெளியிட்டுள்ள செய்தி:

திருந்திய நெல் சாகுபடி முறையில், நெல் உற்பத்தியை அதிகரிக்க முடியும். இதற்காக, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நெல் நடவுப் பணிகளை மேற்கொள்ள இந்த ஆண்டு கோபி வட்டாரத்திற்கு மானியமாக ரூ.17 லட்சம் நிதியை அரசு வழங்கி உள்ளது. ஒரு ஹெக்டேரில் இயந்திரம் மூலமாக நெல் நடவு செய்வதற்கு ரூ.5,000 மானியமாக வழங்கப் படும். ஆள்கள் பற்றாக்குறை உள்ள நிலையில், 15 நாள்களான நெல் நாற்றை இயந்திரம் மூலம் நடவு செய்தால் அதிக மகசூல் கிடைக்கும். இந்தத் திட்டத்தில் பங்கு பெற விரும்பும் விவசாயிகள் கோபி வேளாண்மை விரிவாக்க மையத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

தற்போது, என்.எல்.ஆர். 34449, கோ(ஆர்) 50, கோ(ஆர்) 51, ஏ.எஸ்.டி 16, ஏ.டி.டி 49 ஆகிய ரக விதை நெல் மானிய விலையில் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பசுந்தேயிலை உற்பத்தி அதிகரிப்பு: கொள்முதலில் கோட்டா முறையை அமல்படுத்த வாய்ப்பு

மஞ்சூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் பசுந்தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதால், கொள்முதலில் கோட்டா முறையை அமல்படுத்தப்போவதாக தொழிற்சாலைகள் தரப்பில் கூறப்படுகிறது.

நீலகிரி மாவட்டம், மஞ்சூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் தேயிலை தொழில்தான் பிரதானமாக உள்ளது. இதை நம்பி, மஞ்சூர், கைகாட்டி, கிண்ணக்கொரை, எடக்காடு, பிக்கட்டி, இத்தலார், மகாலிங்கா, மேற்குநாடு உள்ளிட்ட 8 கூட்டுறவு ஆலைகளும், ஏராளமான தனியார் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன.

சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேயிலை விவசாயிகள் இந்தத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த விவசாயிகள், தங்களது தேயிலைத் தோட்டத்தில் இருந்து பறிக்கும் பசுந்தேயிலையை இத்தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், குந்தா பகுதியில் பருவமழை போதிய அளவு பெய்யாததால் கடும் வறட்சியான நிலை ஏற்பட்டது. இதனால், பசுந்தேயிலையின் வரத்து பல மடங்கு குறைந்து, தொழிற்சாலைகளுக்கு தினமும் 4 ஆயிரம் கிலோ முதல் 6 ஆயிரம் கிலோ வரை மட்டுமே பசுந்தேயிலை வரத்து இருந்தது. தினமும் 3 பிரிவுகளாக இயங்கி வந்த தொழிற்சாலைகள் தற்போது ஒருமுறை மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், சீதோஷ்ண நிலை மாற்றத்தால் குந்தா சுற்று வட்டாரப் பகுதியில் கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாகத் தேயிலைத் தோட்டங்களில் மகசூல் அதிகரித்துள்ளது. மஞ்சூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் நாளுக்குநாள் பசுந்தேயிலை வரத்து அதிகரித்துள்ளது. மஞ்சூர், கைகாட்டு கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலை வரத்து தினமும் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் கிலோ வரை அதிகரித்துள்ளது.

மஞ்சூர் உள்பட பெரும்பாலான தொழிற்சாலைகளிலும் விவசாயிகளிடம் இருந்து 2 நாள்களுக்கு ஒருமுறை என இடைவெளிவிட்டு பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. வரும் நாள்களில், தேயிலைவரத்து அதிகரிக்கும்பட்சத்தில் பசுந்தேயிலை கொள்முதலில் கோட்டா முறையை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை உருவாகும் எனத் தொழிற்சாலைகள் தரப்பில் கூறப்படுகிறது.

## மேட்டூர் அணை உபரி நீரை ஏரி, குளங்களில் நிரப்ப வேண்டும்: விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களில் மேட்டூர் அணை உபரி நீரை நிரப்ப வேண்டும் என விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் கு.பழனிச்சாமி, கோட்டாட்சியர்கள் எம்.கண்ணன், ஜி.மகாத்மா உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

விவசாயி கே.தங்கமணி: பரமத்திவேலூர் வட்டத்தில் விவசாயத்துக்கு இலவச மின் இணைப்பு கோரி விண்ணப்பம் அளித்தவர்களுக்கு 15 ஆண்டுகளுக்கு மேலாகியும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை. சுயநிதி திட்டத்தின் கீழ் விண்ணப்பம் அளித்தவர்களுக்கு கடந்த 2004-க்குப் பிறகு மின் இணைப்பு வழங்கவில்லை.

மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வெளி மாவட்டங்களில் இருந்து வாங்கிய கரும்புக்கு கடந்த ஆண்டு ரூ.10 கோடி லாரி வாடகை தந்துள்ளது. ஆனால் மோகனூர், பரமத்திவேலூர் வட்டங்களில் உள்ள ஆலைக்கு பதிவு செய்யாத கரும்பு விவசாயிகளின் கரும்புக்கு, அரசின் ஆதரவு விலையைவிட குறைந்த விலைக்கே கொள்முதல் செய்வோம் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

கரூர்-நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் செல்லும் தனியார் பேருந்துகள் பரமத்தி நகருக்குள் வருவதில்லை. இரவு நேரத்தில் கூட புறவழிச் சாலையிலேயே பயணிகளை இறக்கிவிட்டுச் செல்கின்றன.

நகருக்குள் 2 கி.மீட்டர் தொலைவுக்கு நடந்து செல்ல பெண்கள் அச்சப்படுகின்றனர். இதனால் பேருந்துகளை பரமத்தி நகருக்குள் வந்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் சந்தானம்: மின் இணைப்புக் கோரி கடந்த 2000,மார்ச் 31 வரை பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப வரிசை எண் மூப்பு அடிப்படையில் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. பரமத்திவேலூர் வட்டத்தில் விவசாய மின் இணைப்பு கோரி பெறப்பட்ட மனுக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளதால், இணைப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

விவசாயி நல்லாகவுண்டர்: பள்ளிபாளையம் பொன்னி சர்க்கரை ஆலை நிர்வாகத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையேயான பிரச்னைகளை பேசி தீர்க்க முத்தரப்பு கூட்டத்தை கூட்ட வேண்டும்.

ஆட்சியர்: கோட்டாட்சியர் முன்னிலையில் முத்தரப்பு கூட்டம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயி சிவஞானம்: ஆர்.புதுப்பட்டி ஓடையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

செ.நல்லசாமி: பதநீரில் இருந்து வெல்லம், நாட்டுச் சர்க்கரை தயாரிக்க, பனை மரத்தில் இருந்து பதநீர் இறக்கினால் போலீஸார் வழக்குப் பதிவு செய்கின்றனர். கள் இறக்க மட்டுமே தடை உள்ளது, பதநீர் இறக்கத் தடையில்லை. இதில் உரிய அறிவுறுத்தலை காவல் துறைக்கு அரசு வழங்க வேண்டும்.

வேலுச்சாமி: சாலை விரிவாக்கப் பணிக்காக நாமக்கல் உழவர் சந்தையில் சுமார் 20 அடி அகலத்துக்கு கையகப்படுத்தப் போவதாக கூறப்படுகிறது. இந்த உழவர் சந்தையை நம்பி 1,000 விவசாய குடும்பங்கள் உள்ளன. இப்போதுள்ள நிலையில் தினமும் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வருகின்றனர். இப்போதே போதிய இடம் இல்லாமல் சாலையில்தான் விவசாயிகள் கடை வைத்துள்ளனர்.

இதனால் சாலை விரிவாக்கத்துக்காக உழவர் சந்தையில் ஒரு பகுதி நிலத்தை எடுத்துக் கொண்டாலும், உழவர் சந்தையின் பின்புறம் உள்ள வாகனம் நிறுத்தும் இடம் வரை உழவர் சந்தை வளாகத்தை நீட்டித்துதர வேண்டும்.

பெரியசாமி: பரமத்திவேலூர் ராஜவாய்க்காலில் முறையாக தண்ணீர் திறந்துவிடாததால் சுமார் 20,000 ஏக்கருக்கு கரும்பு, வாழை, வெற்றிலை போன்ற பயிர்கள் கருகி வருகின்றன. மேட்டூர் அணையில் திறந்துவிடப்படும் தண்ணீர் இடையிலேயே முழுவதுமாக திருடப்படுகிறது. இதனால் உழுவுப் பணிக்குத் தேவைக்கு தண்ணீர் கிடைப்பதில்லை. ஆறுகளில் தண்ணீர் திருட்டை தடுத்து நிறுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

காங்கிரஸ் விவசாய பிரிவு மாவட்ட தலைவர் மெய்ஞானமூர்த்தி: மேட்டூர் அணையில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரை, பனைமரத்துப்பட்டி ஏரிக்கு கொண்டுவந்து அங்கிருந்து, ராசிபுரம். சேந்தமங்கலம், நாமக்கல் வட்டங்களில் உள்ள ஏரி, குளங்களில் நிரப்பும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என பல முறை மனு அளித்துள்ளேன்.

ஆனால், அதிகாரிள் சரபங்கா-மணிமுத்தாறு திட்டத்தைச் செயல்படுத்த ஆய்வுகள் நடைபெற்று வருவதாகக் கூறி பதில் தெரிவிக்கின்றனர்.

சரபங்கா-மணிமுத்தாறு திட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டம், ஆனால் நான் கோருவது புதிய திட்டம் என்பதால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப்பணித் துறை அதிகாரி: இந்தத் திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விரிவான ஆய்வுப் பணி தொடங்கப்பட்டுள்ளது. இன்னும் 6 மாதங்களுக்குள் ஆய்வுகள் முடிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

**சம்பா பட்டா சாகுபடிக்கு சான்றுபெற்ற விதை நெல் இருப்பு**

சேந்தமங்கலம் வட்டாரத்தில் சம்பா பட்ட சாகுபடிக்கு சான்று பெற்ற விதை நெல் விற்பனைக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சேந்தமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குர் தங்கராஜூ வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டாரத்தில் சம்பா பட்ட நெல் சாகுபடி துத்திக்குளம், காளப்பநாயக்கன்பட்டி, பள்ளம்பாறை, திருமலைகிரி, ஆர்.பி.புதூர் ஆகிய கிராமங்களில் சராசரியாக, 750 ஹெக்டேரில் மேற்கொள்ளப்படுகிறது.

இப் பட்டத்துக்கு ஏற்ற விதை நெல் கோ(ஆர்) 50, ஏ.டி.டி.45 ஆகிய நெல் ரக விதைகள், சேந்தமங்கலம் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விதை நெல்லுக்கு கோ(ஆர்) 50, ரகத்துக்கு, கிலோ, ரூ.10 என்ற அளவில் மானிய விலையில் வழங்கப்படும். விதைகள் தேவைப்படும் விவசாயிகள், வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பெற்று பயன்பெறலாம்.

## மேட்டூர் அணையில் தூர்வாருதல்: விவசாயிகளிடம் கருத்துக் கேட்பு

மேட்டூர் அணையில் தூர்வாருவது குறித்து விவசாயிகளிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

மேட்டூர் அணை 59.25 சதுர மைல் பரப்பளவு கொண்டது. 120 அடி உயரம் கொண்ட இந்த அணையில் 93.45 டி.எம்.சி தண்ணீரைத் தேக்க முடியும். 1934 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இந்த அணையில் இதுவரை தூர்வாரப்படவில்லை. சுமார் 30 சதவிகித அளவுக்கு வண்டல் மண் படிந்திருப்பதால் அணை நிரம்பினாலும் 75 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே தேங்கும் நிலை உள்ளது.

வாப்காஸ் நிறுவனம் மேட்டூர் நீர்த் தேக்கத்தை தூர்வார பல கட்ட ஆய்வுகளை மேற்கொண்டு, ரூ.4,830 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்துள்ளது. தற்போது மீண்டும் ஒரு ஆய்வு மேற்கொள்கிறது. அதனால் வெள்ளிக்கிழமை காவிரி கரையோரம் வசிக்கும் விவசாயிகளிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது. கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற கருத்துக் கேட்புக் கூட்டத்தில் வாப்காஸ் நிறுவனத் தலைமை பொறியாளர் மூர்த்தி மற்றும் ஆலோசகர்கள் பங்கேற்றனர். மேட்டூர் பொதுப் பணித் துறை சார்பில் கண்காணிப்பு பொறியாளர் சின்னராஜ், செயற்பொறியாளர் சுப்பிரமணி, உதவிச் செயற்பொறியாளர் வசந்தன் மற்றும் மூலக்காடு முதல் பாலாறு வரை உள்ள விவசாயிகள் பங்கேற்றனர்.

மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 715 கனமீட்டர் அளவுக்கு படிந்துள்ள வண்டல் மண்ணை விவசாயிகளே நேரடியாக அள்ளிக் கொள்வதா அல்லது வாப்காஸ் நிறுவனம் மண்ணை ஓரிடத்தில் குவித்த பிறகு விவசாயிகள் அள்ளிக் கொள்வதா எனக் கேட்கப்பட்டது. மேலும், விவசாயிகள் எடுத்துச் செல்லும் வண்டல் மண்ணுக்கு விலை நிர்ணயிக்கலாமா அல்லது இலவசமாக வழங்கலாமா என்பது குறித்து கேட்கப்பட்டது.

ஒரு சில விவசாயிகள் அவரவருக்கு உள்ள விவசாய நிலத்தின் அளவு, அவர்களுக்கு எவ்வளவு மண் தேவை என்பது குறித்து உள்ளாட்சி அமைப்புகளிடம் சான்று பெற்று, அதற்கு ஏற்ப விவசாயிகள் இலவசமாக மண்ணை அள்ளிச் செல்லலாம் என்றனர்.

சிலர் நாங்கள் மேட்டூர் அணை கட்டுவதற்கு நிலம் கொடுத்துள்ளோம். இதனால் 12 காவிரி டெல்டா மாவட்டங்கள் மட்டுமே பயனடைகின்றன. நிலம் கொடுத்த

மேட்டூர் சட்டப்பேரவைத் தொகுதி மக்களுக்கு மேட்டூர் அணை நீர் பயன்படுவதில்லை. எனவே, எங்களின் விவசாய நிலங்களுக்கு வண்டல் மண்ணை இலவசமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். விவசாயிகளின் கோரிக்கைகளை அதிகாரிகள் பதிவு செய்து கொண்டனர். சனிக்கிழமை காலை 10 மணிக்கு கூணான்டியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் மேச்சேரி பகுதி விவசாயிகள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது.

## உளுந்து சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

பட்டுக்கோட்டையை அடுத்த வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உளுந்து சாகுபடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

தென்னை ஆராய்ச்சி நிலையத் தலைவர் பேராசிரியர் ரா. ராஜேந்திரன் தலைமை வகித்தார். பயிர் மரபியல் துறை இயக்குநர் கு. கணேசமூர்த்தி பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.

ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் வெ. ரவி, பேராசிரியர்கள் அப்துல்ரசாக், சத்யா ஆகியோர், காவிரிப்படுகை விவசாயிகள் பயறுவகைப் பயிர்கள் பயிரிடுவதன் முக்கியத்துவம், உழவியல் தொழில்நுட்பம் ஆகியன குறித்து பயிற்சி அளித்தனர்.

இதில், வேளாண் துறை மூலம் தேர்வு செய்யப்பட்ட பட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 100 முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர்.

இதேபோல, மதுக்கூர் வடக்கு கிராமத்தில் விவசாயி சந்திரன் வயலில் உளுந்து ரகம் குறித்து விளக்குவதற்கான வயல்தின விழா நடைபெற்றது. இதில், வேளாண் அலுவலர்கள் அ. பாரதி, மகாலிங்கம் ஆகியோர் பயறு வகைப் பயிர்களில் ஏக்கருக்கு ஆயிரம் கிலோ மகசூல் பெறுவதற்கான வழிமுறைகளை விளக்கினர். பட்டுக்கோட்டை வேளாண் அலுவலர் எஸ். மாலதி, மதுக்கூர் உதவி வேளாண் இயக்குநர் நவீன்சேவியர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 1,324 டன் பொட்டாஷ் உரம் தஞ்சை வந்தது

தூத்துக்குடியில் இருந்து சரக்கு ரயிலில் 1,325 டன் பொட்டாஷ் உரம் தஞ்சாவூருக்கு வந்தது.

மாவட்டத்தில் மோட்டார் பம்புசெட் மூலம் குறுவை சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கு தேவையான உரங்கள் கூட்டுறவு மற்றும் தனியார் உரக்கடைகளுக்கு வரவழைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது குறுவை மற்றும் சம்பா நெல் பயிர்களுக்கு இடுவதற்காக தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து வெள்ளிக்கிழமை 21 வேகன்களில் 1,325 டன் பொட்டாஷ் உரம் தஞ்சாவூருக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த உரங்கள் தஞ்சாவூரிலிருந்து லாரிகள் மூலம் தஞ்சாவூர், நாகை, திருவாரூர்,

புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள பல்வேறு தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## ஜூலை 29-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகப் பெருந்திட்ட வளாகத்தின் கீழ்தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஜூலை 29-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் மேலும் தெரிவித்திருப்பது:

இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம். இதில், கருத்துகளைத் தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை 29-ம் தேதி காலை 9 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

மேலும், விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவுசெய்து ஒப்புதல் பெற்று, பிறகு மனுக்களை அளிக்க வேண்டும்.

## ஜூலை 27-இல் இயற்கை முறை நெல் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

சிக்கல் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், இயற்கை முறை நெல் சாகுபடி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி முகாம், நாகை மாவட்டம், திருவிடைக்கழியில் ஜூலை 27-ஆம் தேதி நடைபெறும் என வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் அ. அனுராதா தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டம், செம்பனார்கோயில் வட்டாரம், திருவிடைக்கழி ஊராட்சி, மேலவெளியில் இந்த முகாம் நடைபெறும். ஜூலை 27-ஆம் தேதி காலை 10 மணிக்கு தொடங்கப்படும் இந்த முகாமில், ஆர்வமுள்ள விவசாயிகள், பண்ணை மகளிர், இளம் விவசாயிகள், தொழில் முனைவோர்கள் பங்கேற்கலாம்.

இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு 04365- 246266 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம் என அவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## சேலத்துக்கு 1,200 டன் சன்ன ரக அரிசி

நீடாமங்கலத்திலிருந்து சேலத்துக்கு 1,200 டன் சன்னரக அரிசி பொது விநியோகத் திட்டத்திற்காக வெள்ளிக்கிழமை சரக்கு ரயிலில் அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக்கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றிலிருந்து 1,200 டன் எடையுள்ள சன்னரக அரிசி 100 லாரிகளில் நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது. நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் சேலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## நெல்லை மாவட்டத்தில் 7555 ஹெக்டேரில் நெல் நடவு: ஆட்சியர்

திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ் கார் பருவத்தில் 7555 ஹெக்டேரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் மு. கருணாகரன் தெரிவித்தார்.

தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடிக்கு தேவையான இடுபொருள்கள் இருப்பு குறித்து வேளாண் அதிகாரிகள், விவசாயிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் மு. கருணாகரன் பேசியது: நிகழாண்டு கார் பருவத்தில் இதுவரை 7555 ஹெக்டேரில் நெல் நடவு

செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 1700 ஹெக்டேர் பரப்பளவு கூடுதலாகும். சாகுபடிக்கு அணைகளில் இருந்து உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்பட்டதால் சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மேலும் பாசனத்துக்கு தேவையான டி.ஏ.பி., யூரியா, பொட்டாஷ் போன்ற இடுபொருள்கள் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதால் சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டை விட நிகழாண்டு நெல் சாகுபடி மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளுக்கு தேவையான நீரை கடத்தும் குழாய்கள், வேளாண் இயந்திரங்கள் போன்றவை மானிய விலையில் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் உரம், பூச்சி மருந்துகள் வாங்கும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த விலையில் ரசீதுடன் விற்பனை செய்ய வேண்டும். இதை பின்பற்றாத உரக்கடைகள், விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

கூட்டத்தில், திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) இல. பெருமாள், வேளாண் பொறியியல் துறை நிர்வாகப் பொறியாளர் பாலசந்திரன், மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் ஆர். ராஜேந்திரன், தமிழ்நாடு கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநர் புஷ்பா, கூட்டுறவு, வேளாண் பொறியியல் துறை, பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாயிகள், உரக்கடை விற்பனையாளர்கள் பங்கேற்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கசக்கும் தேன்

தேன் என்றாலே இனிப்பிற்கும், களிப்பிற்கும் தான் உவமையாக கூறுவோம். 'கண்ணே கனியமுதே தேனே தெவிட்டாத தெள்ளமுதே' என்பது தாலாட்டுப் பாடல். ஆனால் மலேசியாவில் தேனை கசப்பிற்கும் வெறுப்பிற்கும் கூட உவமையாகக் கூறுவர்.

முகத்தைச் சுளிப்பவர்களைப் பார்த்து தேன் குடித்தவன் போல் ஏன் இருக்கிறாய்? என கூறுவர். ஏனெனில் மலேசியாவில் ரப்பர் தோட்டங்களில் கிடைக்கும் தேன் மற்ற நாடுகளில் கிடைக்கும் தேனை விட கடும் கசப்பாக இருக்கிறது. இந்தக் தேன் கொடிய வயிற்று நோயையும் போக்கும் ஆற்றல் கொண்டது. இந்தியாவில் வேப்பந்தோப்பு தேன் சற்றே கசப்புச் சுவையுடன் இருக்கும்.

### நீர் மேலாண்மையில் நீலகிரி இணையணும்

ஊட்டி : 'நீர் மேலாண்மை மற்றும் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் தயாரிக்கப்படும் திட்டத்தில், நீலகிரியை இணைக்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.
நீலகிரி சிறு தேயிலை விவசாயிகள் மைய அமைப்பாளர் வேணு கூறியதாவது: நேற்று வெளியான மாநில பட்ஜெட்டில், 445 கோடி ரூபாய், நீர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு திட்டத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. தென்னகத்தின் நீர் தொட்டி எனப்படும் நீலகிரியில், குறிப்பாக, ஊட்டியில், இதுவரை இல்லாத தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. குன்னூர், வறண்ட பூமியாகவே மாறி விட்டது.\
எனவே, மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில், ஊட்டி உட்பட நீலகிரி மாவட்டத்தின் நீர் மேலாண்மை மற்றும் பாதுகாப்புப் பணிக்கென திட்டம் தயாரித்து, அதை இணைக்க, மாவட்டத்தில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.,க்கள் முயற்சி எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், மக்களின் நீர் தேவை பூர்த்தியாவதுடன், சுற்றுலா மேம்படும். இவ்வாறு, வேணு கூறினார்.

## தெளிப்புநீர் பாசன கருவி வினியோகம்

கோத்தகிரி ;கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் சித்ரா பானு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:கோத்தகிரி வட்டாரத்தில் மத்திய அரசின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்பட உள்ளது. இதில், காய்கறி பயிர்கள் சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியத்திலும் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்பட உள்ளது. மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பை சார்ந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை தரப்பட உள்ளது. எனவே, இந்த வாய்ப்பை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறு, சித்ரா பானு கூறியுள்ளார்.

## உழவர் சந்தையில்பலாபழ விற்பனை

குன்னுார் ;குன்னுார் உழவர் சந்தையில் பலாபழ விற்பனை களை கட்டி உள்ளது.

பர்லியார் பகுதியில் 'கடசக்கா' எனப்படும் ஈரபலா பழம் சீசன் துவங்கி உள்ளது. இதன் விற்பனை குன்னுார் உட்பட மாவட்டத்தின் பல பகுதியிலும் அதிகரித்துள்ளது. தற்போது, குன்னுார் உழவர் சந்தையில் கிலோ, 60 முதல் 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும் இந்த பழங்கள், மருத்துவ குணம் நிறைந்ததாக உள்ளதால், விற்பனை அதிகரித்துள்ளது.

## வரப்புகளில் பயிர் செய்ய மான்யம்: உதவி இயக்குநர் தகவல்

விழுப்புரம்;நெல் வயல் வரப்புகளில் பயறு வகைகளை பயிர் செய்தால் மான்யம் வழங்கப்படும் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்தார்.

விழுப்புரம் அடுத்த கோலியனுார் வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு பயறு வகை விதைகள் விநியோக நிகழ்ச்சி நடந்தது. கூட்டத்திற்கு, வேளாண் உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் தலைமை தாங்கி பேசியதாவது: விழுப்புரம் பகுதியில் ஆண்டு முழுவதும், பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்ய உகந்த சூழ்நிலை உள்ளது. சம்பா நெல் பயிர்கள் அறுவடைக்கு முன் நெல் தரிசில் குறைந்த செலவில் பயறு சாகுபடி செய்யலாம்.

நெல் வயல் வரப்புகளில் பயறு வகை பயிர்கள் வரப்பு பயிராக சாகுபடி செய்யலாம். வரப்பு பயிரில் ஏக்கருக்கு 100 முதல் 150 கிலோ வரை மகசூல் கிடைக்கும். வரப்பு பயிர் சாகுபடியினை ஊக்கப்படுத்த எக்டேருக்கு 150 ரூபாய் மான்யம் வழங்கப்படுகிறது.

தரமான சான்று விதைகளுக்கு ரகத்தை பொறுத்து கிலோ ஒன்றிற்கு 15 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை மான்யம் வழங்கப்படுகிறது. பயறு சாகுபடி விவசாயிகளை ஊக்கப்படுத்த 50 சதவீதம் மான்யத்தில் நீர்த்துாவிகள், நுண் சத்துக்கள், பெருவிளக்கப் பண்ணைகள், உயிர் உரங்கள், உயிரியல் மருந்துகள் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் நடப்பாண்டில், அதிகளவில் பயறு சாகுபடி செய்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு கென்னடி ஜெபக்குமார் பேசினார். அப்போது, வேளாண் அலுவலர்கள் செந்தில்குமார், கங்காகவுரி, ஜோதிமணி, வேல்முருகன், நடராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஏல மையத்திற்கு குறைந்தது ஏலக்காய் வரத்து

கம்பம்: செடிகளில் காய் பிடிப்பு குறைவாக இருப்பதால், ஏலக்காய் வரத்து ஏல மையத்திற்கு கடுமையாக குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கேரளா இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் மூன்று தாலுக்காக்களில் ஏலக்காய் சாகுபடியாகிறது. மேலும் வயநாடு, கோட்டயம் போன்ற மாவட்டங்களில் சிறிதளது சாகுபடி செய்யப்படுகிறது.

இச்சாகுபடியில் எப்போதுமே விவசாயிகளுக்கு திருப்தியான நிலை இருந்ததில்லை. விலை இருந்தால், மகசூல் குறைவதும், மகசூல் கிடைத்தால் விலை கிடைக்காமல் போவதும் வாடிக்கையாகும்.

இந்நிலையில் இந்த சீசனில் மகசூல் கடுமையாக பாதிக்கப்படும் நிலை எழுந்துள்ளது. நேற்று புத்தடியில் நடந்த ஏலத்தில் காலையில் 40 ஆயிரம் கிலோவும், மாலையில் 29 ஆயிரம் கிலோவும் வரத்து இருந்தது. இது கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் 50 சதவீதம் வரத்து குறைந்திருப்பதாக ஏலவிவசாயிகள் கூறுகின்றனர்.

விலையும் எதிர்பார்த்த அளவிற்கு கிடைக்கவில்லை. கிலோவிற்கு சராசரியாக ரூ. 800 கிடைக்கிறது. அதிகபட்சமாக ரூ. ஆயிரத்து 100 ம், குறைந்த பட்சமாக கிலோவிற்கு ரூ. 600 ம் கிடைத்து வருகிறது.

காரணம் என்ன

காய் வரத்து குறைவிற்கு காரணம் குறித்து ஏலமைய அலுவலர்கள் கூறுகையில்,'ஏலச்செடிகளில் காய் பிடிப்பு குறைந்துள்ளது.

கோடையில் அதிக வெயில் இருந்தே இதற்கு காரணம். தற்போது மழை பெய்தாலும் காய் பிடிக்க காலதாமதம் ஆகும்.

எனவே வரத்து குறைந்துள்ளது. குறிப்பாக முதல் தர மண்டலப்பகுதிகளில் காய் முழுக்க முழுக்க மிகவும் குறைவாக செடிகளில் காணப்படுகிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது மண்டலங்களில் கூட செடிகளில் காய் உள்ளது. எனவே இந்த ஆண்டு மகசூல் குறைவாகத் தான் இருக்கும்,' என்றனர்.

## வெளிமாவட்ட நெல் நடவு இயந்திரங்கள் தேனி வருகை

தேனி: மாவட்டத்தில் இயந்திர நெல் நடவிற்காக வெளி மாவட்டங்களில் இருந்து நடவு இயந்திரங்கள் வரவழைக்கப்படுகின்றன.

தேனி மாவட்டத்தில் முதல்பருவ குருவை நெல் 14,707 ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 20 சதவீதம் 2 ஆயிரம் ஏக்கரில் இயந்திர நெல்நடவு செய்ய வேளாண் துறை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேளாண் பணிகளில் ஆட்கள் பற்றாக்குறையால் இயந்திர பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இயந்திர நடவினை ஊக்குவிக்கும் வகையில் ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் பின் ஏற்பு மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.

இயந்திரத்தில் நாள் ஒன்றுக்கு 5 ஏக்கரில் நடவு செய்யலாம். ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் முதல் ரூ.4 ஆயிரம் கட்டணமாக வசூலிக்கப்படும். விவசாயிகள் முன்பதிவு செய்தவுடன் இயந்திர நடவு பணியாளர்கள் சம்மந்தப்பட்ட வயலில் நாற்றங்கால் தயாரிக்கின்றனர்.

ஏக்கருக்கு 10 முதல் 12 கிலோ விதைநெல் பயன்படுத்தி 80 டிரேயில் நாற்றங்கல் வளர்க்கின்றனர். 18 முதல் 21 நாட்கள் வளர்ந்த நெல் நாற்றுக்கள் இயந்திரம் மூலம் நடவு செய்கின்றனர்.

இயந்திர நடவில் களை நிர்வாகம் மிக முக்கியம். நடவிற்கு முன் களைக்கொல்லி பயன்படுத்த வேண்டும். நடவு செய்த 25 நாட்களுக்கு பிறகு களை கொல்லி இடவேண்டும். உரிய தொழில் நுட்பத்தினை ஆலோசனை படி செய்தால் நல்ல மகசூல் பெறலாம்.

வெளிமாவட்டம்

மாவட்டத்தில் இயந்திரநெல் நடவு பயன்பாடு அதிகரித்துள்ளதால் சேலம், நாமக்கல், மதுரை மாவட்டங்களில் இருந்து அதற்கான இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன.

இயந்திர நெல் நடவு செய்யவிரும்பும் விவசாயிகள் சம்மந்தப்பட்ட உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு ஆவணங்களை சமர்ப்பித்தால் மானியம் பெறலாம். மேலும் முதல்போக சாகுபடிக்காக மாவட்டத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் 300 டன் சான்று பெற்ற விதை நெல் இருப்பு வைத்து வினியோகிக்கப்பட்டு வருகிறது.

இதில் என்.எல்.ஆர்., பொன்னி, ஏ.டி.டி.45, ஏ.டி.டி.,36 உட்பட சிறந்த நெல் விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் கிலோவிற்கு ரூ.10 மானியம் வழங்கப்படுகிறது. இதில் விவசாயிகள் பயன்பெறலாம் என வேளாண் இணை இயக்குனர் சங்கரன் தெரிவித்தார்.

## அதிக மாவு சத்து உள்ள மரவள்ளி பயிரிட விஞ்ஞானிகள் அறிவுரை

பனமரத்துப்பட்டி: அதிக மாவு சத்து உள்ள மரவள்ளி பயிர்களை நடவு செய்து, விவசாயிகள் பயன் பெற வேண்டும் என, சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்த மரவள்ளி சாகுபடி கருத்தரங்கில், வேளாண் விஞ்ஞானிகள் அறிவுறுத்தினர்.

சேலம், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம், திருவனந்தபுரம் மத்திய கிழங்கு வகை பயிர்கள் ஆராய்ச்சி நிலையமும் இணைந்து, ஒரு நாள் மரவள்ளி சாகுபடி கருத்தரங்கு மற்றும் கருத்து கண்காட்சி நடந்தினர். திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம் வரவேற்றார். சேலம் வேளாண் இணை இயக்குனர் இளங்கோ, கருத்தரங்கை துவக்கி வைத்தார். திருவனந்தபுரம், மத்திய கிழங்கு வகை பயிர்களின் ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் விஞ்ஞானி ஷீலா, பயிர் சாகுபடி துறை முதன்மை விஞ்ஞானி ரவி, விதைத்துறை முதுநிலை விஞ்ஞானி முத்துராஜ்

ஆகியோர், மரவள்ளி விதை குச்சி தேர்வு, நடவு முறை, ஊட்டசத்து பற்றாக்குறை சரி செய்தல், மண் பரிசோதனை செய்து உரமிடல், நீர் மேலாண்மை, களை கட்டுப்பாடு, புதிய ரகங்கள், அதன் தன்மைகள், மகசூல் திறன், மாவு சத்து அளவு குறித்து, விவசாயிகளுக்கு விளக்கினார். இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் வெளியிட்டுள்ள புதிய ரகங்களில், குறைந்த வயதில், வறட்சியை தாங்கி வளர்ந்து, அதிக மாவு சத்து இருக்கும் மரவள்ளியை பயிர் செய்து, விவசாயிகள் பயன் பெற வேண்டும் என, விஞ்ஞானிகள் அறிவுறுத்தினர். கண்காட்சியில், மரவள்ளி சாகுபடி தொழில்நுட்பம், இடுபொருட்கள், உயர் விளைச்சல் மரவள்ளி கிழங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. சேலம் மாவட்டத்தை சேர்ந்த, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

### சாரல் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

தலைவாசல்: தலைவாசல் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில், நேற்று காலை முதல், மந்தமான வானிலை நிலவியது. மதியம், வானம் மேகமூட்டமாக காணப்பட்டதுடன், குளிர்ந்த காற்று வீசியது. பின், தலைவாசல், தேவியாக்குறிச்சி, காமக்காபாளையம் உள்ளிட்ட இடங்களில் சாரல் மழை பெய்தது. அரை மணி நேரத்துக்கும் மேலாக பெய்த மழையால், ரம்மியமான சூழல் நிலவியது. சேலம் மாநகர் உள்ளிட்ட பகுதிகளில், மழை சற்று பெய்தாலும், தலைவாசல், ஆத்தூர் சுற்றுப்பகுதிகளில் மழை பொழிவு குறைந்து, மானாவாரி பயிர் செய்த விவசாயிகள் ஏமாற்றமடைவர். நேற்று பெய்த மழையால், விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

### விவசாயிகளுக்கு ஏத்தாப்பூரில் பயிற்சி

ஏற்காடு: ஏற்காடு தோட்டக்கலை துறை சார்பாக, அலுவலர் திருமுகம் தலைமையில், ஏற்காடை சேர்ந்த விவசாயிகள், 15 பேர், ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கு, அவர்களுக்கு மரவள்ளி கிழங்கு மற்றும் ஆமணக்கு விவசாயம் குறித்தும், சாகுபடி குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளை தோட்டக்கலை அலுவலர்கள் செய்திருந்தனர்.

## நிலக்கடலைக்கு ஊடு பயிராக பயறு சாகுபடி செய்ய மானியம்

சிவகங்கை: நிலக்கடலைக்கு ஊடுபயிராக பயிறு வகைகளை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது.
கலெக்டர் மலர்விழி கூறியதாவது:

சர்வதேச பயறு வகை ஆண்டாக, இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.சிவகங்கை மாவட்டத்தில் பயறு வகைகளின் சாகுபடி பரப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்காக நிலக்கடலையுடன் பயிறு வகைகளை ஊடுபயிராக சாகுபடி செய்ய தேசிய வேளாண் வளர்சசி திட்டத்தில் மானியம் வழங்கப்பட உள்ளது. மாவட்டம் முழுவதும் 3 ஆயிரம் எக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சாதாரண முறையில் நிலக்கடலையை விதைப்பு செய்தால் சீரான இடைவெளி இருக்காது.
இதனால் சில இடங்களில் அதிக இடைவெளியில் பயிர்கள் முளைக்கும். மகசூல் குறையும். இதனை தவிர்க்க டிராக்டர் மூலம் இயக்கப்படும் விதைப்பு இயந்திரத்தை பயன்படுத்தினால் ச.மீ., க்கு 33 செடிகள் இருக்கும் வகையில் சீரான இடைவெளியில் விதைக்க இயலும்.
தேவையான இடைவெளி கிடைப்பதால் வேர் வளர்ச்சி நன்றாக இருக்கும். ஊட்டச்சத்துக்கள் நன்கு உட்கிரகிக்கப்பட்டு அதிக பக்க கிளைகள் உருவாகும். மேலும் களைகள் பரவுவது தடுக்கப்படும். பூ, காய் பிடிக்கும் தன்மை அதிகரிக்கும். இத்துடன் ஊடுபயிராக 6 அடி இடைவெளியில் உளுந்து, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு விதைப்பு செய்து அதிக லாபம் பெறலாம்.

இதற்கு ஏக்கருக்கு ரூ.400 மானியமாக வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 5 ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் வழங்கப்படும். விரும்புவோர் நில உரிமை சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை, விதைப்பு செய்ததற்கான புகைப்படம், வங்கி கணக்கு எண் ஆகிய விபரங்களுடன் வேளாண் விரிவாக்க மையத்தில் பதிவு செய்ய வேண்டும், என்றார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

மானாமதுரை: பிரதம மந்திரி நீர்ப்பாசன திட்டம் சார்பில் மானாமதுரையில் நீர் ஆதாரம் குறித்த கருத்தரங்கு நடந்தது.

வேளாண் உதவி இயக்குனர் மூர்த்தி தலைமை வகித்தார்.சொட்டு நீர் பாசனம், பண்ணை குட்டைகள் அமைத்தல், மீன் வளர்த்தல் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டன. மேலும் சீமைக் கருவேல மரங்களை முற்றிலும் அகற்ற வேண்டும் என, வலியுறுத்தினர்.

ஒன்றியத் தலைவர் மாரிமுத்து, வேளாண் திட்ட இயக்குனர் கணேசன், குன்றக்குடி வேளான் அறிவியல் மைய பேராசிரியர் செல்வராஜ், மானாமதுரை வேளாண் உதவி அலுவலர் நீதிபதி மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## பல ஆண்டுகளுக்கு பின் ரஷ்யாவிற்கு தேயிலை ஏற்றுமதி



ஊட்டி: பல ஆண்டுகளுக்கு பின் ரஷ்யாவிற்கு மீண்டும் நீலகிரி தேயிலை தூள் ஏற்றுமதி செய்யப்படுவதாக தேயிலை வாரிய செயல் இயக்குநர் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் கீழ் செயல்படும் மகளிர் குழுக்களை சேர்ந்தவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. நேற்று ஒரு மகளிர் குழுவுக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சில் பங்கேற்ற தேயிலை வாரிய செயல் இயக்குநர் பால்ராசு நிருபர்களிடம் கூறியதாவது:

மேலும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறு,குறு விவசாயிகளுக்கு சராசரி விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.15 கிடைத்திட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி பகுதியில் உள்ள 4 தனியார் தேயிலை தொழிற்சாலைகள் தரம் குறைந்த தேயிலை தூள் தயாரித்தது தெரியவந்தது. அந்த தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 40 டன் தேயிலை தூள் அழிக்கப்பட்டது. தற்போது மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூளுக்கு 70 முதல் 100 வரை விலை கிடைக்கிறது. கென்யாவில் வறட்சி ஏற்பட்டுள்ளதால் ரஷ்யா மீண்டும் நம்மிடம் தேயிலை தூள் வாங்க ஆரம்பித்துள்ளது. மேலும், எகிப்து, ஈரான் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதால் நமது தேயிலை தூளுக்கு கூடுதல் விலை கிடைக்க வாய்ப்புள்ளதுஎன்றார்.

## விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் மணிமொழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், விழுப்புரம் மாவட்டத்தில் தோட்ட கலைத்துறை சார்பில் வரும் 25, 26 ஆகிய இரு நாட்களில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இம்மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், தகுதி வாய்ந்த பயனாளிகளை தேர்வு செய்யும் நோக்கிலும் அனைத்து வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் இம்முகாம் நடக்கிறது.

பல்வேறு திட்டங்களின் மானிய விவரம், இதனை பெறுவதற்கான தகுதிகள், சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் என பல தகவல்களை விவசாயிகள் இந்த முகாம் மூலம் தெரிந்துகொள்ளலாம். தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய நுண்ணீர் பாசனத்திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம், மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம், தேசிய மூங்கில் இயக்கம், நீர்வள நிலவள திட்டம் போன்றவைகள் இந்த துறைமூலம் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் பழமரங்கள், காய்கறிகள், கொய்மலர்கள், உதிரிமலர்கள், மலை தோட்டப்பயிர்கள், பசுமை குடில்கள் மற்றும் நிழல்வலை கூடாரங்கள், உயர் தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்தல் போன்றவைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளலாம்.

**பயறு வகை சந்தைப் படுத்துதல் விழிப்புணர்வு முகாம்**

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி அடுத்த கோதிகுட்டலப்பள்ளி, மோரமடுகு மற்றும் மரிக்கம்பள்ளி கிராமங்களில், உலக பயறு வகைககள் ஆண்டு 2016ம் ஆண்டின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கும் நோக்கில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் மூலம், பயறு வகை சாகுபடி மற்றும் சந்தை படுத்துதல் குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. இந்த முகாமில் திட்டத்தின் முக்கியத்துவம், அரசின் மானியங்கள் குறித்து மாவட்ட வேளாண் உதவி இயக்குநர் ரமேஷ் ஒய் நர்குந்து எடுத்துரைத்தார்.

மேலும், பயறு வகை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் அலுவலர் சரவணன், பயறு வகைகள் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப் படுத்துதல் தொழில்நுட்பங்கள் குறித்தும் வேளாண்மை அலுவலர் அகிலாண்டீஸ்வரியும் எடுத்துரைத்தனர். இதே போல் ஆட்மா தொழில்நுட்ப குழு மேலாளர் நந்தினி ஆட்மா முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இந்த முகாமில் ஊராட்சி தலைவர்கள், மன்ற உறுப்பினர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள், விவசாய ஆர்வலர்கள், குழு ஆத்மா உழவன் நண்பன் மற்றும்

விவசாயிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். முகாம் ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மற்றும் ஆத்மா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

## காடையாம்பட்டியில் மரவள்ளி அறுவடை தீவிரம் டன் ரூ.8 ஆயிரத்திற்கு விற்பனை

காடையாம்பட்டி : காடையாம்பட்டி பகுதியில் மரவள்ளி அறுவடை முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. டன் ரூ.8 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். காடையாம்பட்டி பகுதியில் அதிகப்படியான வருடப்பயிர்களான கரும்பு, மரவள்ளிகிழங்கு, வழை உள்ளிட்ட பயிர்களை அதிகளவில் பயிரிட்டுள்ளனர். காடையாம்பட்டியை அடுத்த டேனிஷ்பேட்டை, காடையாம்பட்டி, கணவாய்ப்புதூர், வேப்பிலைப்பட்டி, கொங்கரப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் மரவள்ளி அறுவடை துவங்கியுள்ளது.

தற்போது, ஒரு டன் ரூ.8 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: கடந்த ஆண்டு ஒரு டன் மரவள்ளி கிழங்கு ரூ.3 ஆயிரம் முதல் ரூ.4 ஆயிரம் வரை மட்டுமே விலை போனது. இதனால், சாகுபடி பரப்பினை குறைத்துவிட்டதாலும், போதிய மழை இல்லாத காரணத்தாலும் விளைச்சல் குறைந்துள்ளது. இதன் காரணமாக விலை உயர்ந்துள்ளது. தற்போது, அறுவடை துவங்கியுள்ள நிலையில் விலைய குறைய வாய்ப்பில்லை. இதனால், சாகுபடி விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மேட்டூர் அணையில் 715 கனமீட்டருக்கு வண்டல் மண் அகற்றுவது எப்படி? விவசாயிகளிடம் கருத்து கேட்பு

மேட்டூர் : மேட்டூர் அணையில் 713 கனமீட்டருக்கு படிந்துள்ள வண்டல்மண்ணை அகற்றுவது குறித்து விவசாயிகளிடம் கருத்து கேட்கப்பட்டது. தமிழகத்தின் உயிர்நாடியாக விளங்கும் மேட்டூர் அணை நீர்த்தேக்கம் 59.25 சதுரமைல் பரப்பளவு கொண்டது. 120 அடி உயரம் கொண்ட இந்த அணையில் 93.45 டி.எம்.சி தண்ணீரை தேக்கமுடியும். 1934ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்ட இந்த அணையில் இதுவரை தூர்வாரப்படவில்லை.

சுமார் 30 சதவிகித அளவுக்கு வண்டல் மண் படிந்திருப்பதால் அணை நிரம்பினாலும் 75 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே தேங்கும் நிலை உள்ளது. வாப்காஸ் நிறுவனம் மேட்டூர் நீர்த்தேக்கத்தை தூர் வார பல கட்ட ஆய்வுகளை மேற்கொண்டு ரூ.4,830 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்துள்ளது. தற்போது, மீண்டும் ஒரு ஆய்வு மேற்கொள்கிறது.

இதுதொடர்பாக நேற்று காவிரி கரையோரம் வசிக்கும் விவசாயிகளிடம் கருத்துகேட்பு கூட்டம் நடத்தப்பட்டது. கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் வாப்காஸ் நிறுவன தலைமை பொறியாளர் மூர்த்தி மற்றும் ஆலோசகர்கள் பங்கேற்றனர். மேட்டூர் பொதுப்பணித்துறை சார்பில் கண்காணிப்பு பொறியாளர் சின்னராஜ், செயற்பொறியாளர் சுப்பிரமணி, உதவி செயற்பொறியாளர் வசந்தன் மற்றும் மூலக்காடு முதல் பாலாறு வரையில் உள்ள விவசாயிகள் பங்கேற்றனர்.

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 715 கனமீட்டர் அளவுக்கு படிந்துள்ள வண்டல் மண்ணை விவசாயிகளே நேரடியாக அள்ளிக்கொள்வதா? அல்லது வாப்காஸ் நிறுவனம் மண்ணை ஓரிடத்தில் குவித்தபிறகு விவசாயிகள் அள்ளிக்கொள்ள அனுமதிக்கலாமா? என கேட்கப்பட்டது. மேலும், விவசாயிகள் எடுத்துச்செல்லும் வண்ணடல் மண்ணுக்கு விலை நிர்ணயிக்கலாமா? அல்லது இலவசமாக வழங்கலாமா? என்பது குறித்து கேட்கப்பட்டது.

ஒரு சில விவசாயிகள் அவரவருக்கு உள்ள விவசாய நிலத்தின் அளவு, அவர்களுக்கு எவ்வளவு மண் தேவை என்பது குறித்து உள்ளாட்சி அமைப்புகளிடம் சான்று பெற்று அதற்கேற்ப விவசாயிகள் இலவசமாக மண்ணை அள்ளிச்செல்ல அனுமதிக்கலாம் என்றனர். ஆனால், ஒரு சிலரோ நாங்கள் மேட்டூர் அணை கட்டுவதற்கு நிலம் கொடுத்துள்ளோம். இதனால், 12 காவிரி டெல்டா மாவட்டங்கள் மட்டுமே பயனடைகின்றன.

நிலம் கொடுத்த மேட்டூர் சட்டமன்ற தொகுதி மக்களுக்கு மேட்டூர் அணை நீர் பயன்படுவதில்லை. எனவே, எங்களின் விவசாய நிலங்களுக்கு வண்டல் மண்ணை இலவசமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். விவசாயிகளின் கோரிக்கைகளை அதிகாரிகள் பதிவு செய்துகொண்டனர்.

## கொல்லிமலையில் அறுவடை துவக்கம் அன்னாசிபழம் விற்பனை ஜோர்

தர்மபுரி : கொல்லிமலையில் அன்னாசிபழம் அறுவடை சீசன் தொடங்கியுள்ளதால் தர்மபுரி மார்க்கெட்டிற்கு அதிக அளவில் அன்னாசி பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் அன்னாசி பழம் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. ஜூலை மாதம் முதல் அன்னாசி பழம் அறுவடை சீசன் துவங்கி, இரண்டு மாதம் வரை அறுவடை பணி நடக்கும். கொல்லிமலையில் அறுவடை துவங்கியதும் தர்மபுரிக்கு அதிக அளவில் அன்னாசி பழம் விற்பனைக்கு கொண்டு வரப்படுவது வழக்கம்.

தற்போது அன்னாசிபழம் சீசன் தொடங்கியிருப்பதால் தர்மபுரி மார்க்கெட்டுக்கு 5 டன் அளவுக்கு அன்னாசி பழங்கள் கொல்லிமலையில் இருந்து லாரி மூலம் விற்பனைக்கு வருகிறது. ஒரு பழம் ரூ.20, ரூ.30, ரூ.40 என விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், கொல்லிமலையில் அன்னாசி பழம் அறுவடை சீசன் தொடங்கியுள்ளது. தர்மபுரிக்கு 2 நாட்களுக்கு ஒரு முறை 5 டன் அன்னாசி பழம் விற்பனைக்கு வருகிறது,'என்றனர்.

## தென்னைக்கு கோழி உரம் சிறந்தது வேளாண் அதிகாரி தகவல்

உடுமலை, : தென்னைக்கு இயற்கை உரங்களில் மக்கிய தொழு உரம், கோழி உரம் மிகவும் ஏற்றது என வேளாண் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.குடிமங்கலம் வேளாண் உதவி இயக்குர் வெளியிட்டுள்ள அறிக்கை: தென்னை சாகுபடியில் மக்கிய தொழு உரம், கோழி உரம், ஆட்டு உரம், பன்றி உரம், புண்ணாக்கு வகைகள், பசுந்தாள்,நுண்ணுயிர் உரம், சோகை பரப்புதல் மற்றும் மட்டை புதைத்தல், மண்புழு உரம் ஆகியவை அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் சிறந்தது மக்கிய தொழு உரம், மக்கிய கோழி உரம் ஆகியவையே.

மக்கிய தொழு உரத்தில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துக்கு தேவையான நுண்ணூட்ட சத்துக்கள் அடங்கி உள்ளன. கால்நடைகளின் சாணத்தை விட அதன் சிறுநீரில்தான் சத்துக்கள் அதிகம் உள்ளன. எனவே கால்நடைகளின் சிறுநீரை சேமித்து பயன்படுத்த வேண்டும். 100 முதல் 120 வரை காய்க்கும் நெட்டை ரக தென்னைகளுக்கு ஆண்டுக்கு 100 கிலோ வரையும், 200 முதல் 250 வரை காய்கள்

தரும் நெட்டை, குட்டை கலப்பின ரகத்துக்கு ஆண்டுக்கு 250 கிலோ வரையும் தொழு உரமிடலாம்.

கோழி உரத்திலும் மேற்கண்ட சத்துக்கள் உள்ளன. இதை இயற்கை யூரியா என்றே சொல்லலாம். இதை தேவைக்கு அதிகமாக இட்டால் இலைக்கருகல் நோய் தாக்குதல் அதிகரிக்கும். இந்த உரத்தை நல்ல முறையில் மக்க வைத்துதான் பயன்படுத்த வேண்டும். ஒரு முறைக்கு ஒரு மரத்திற்கு 5 கிலோவுக்கு மேல் போடக்கூடாது. இத்துடன் 250 கிராம் முதல் 500 கிராம் வரை பொட்டாஷ் உரத்தை சேர்த்து இடுவது மிகுந்த பயனை அளிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அகில உலக வேளாண், தோட்டக்கலை கண்காட்சி திருச்சி விவசாயிகள் டெல்லி பயணம்

திருச்சி, : அகில உலக வேளாண் மற்றும் தோட்டக்கலை கண்காட்சியில் கலந்து கொள்ள திருச்சி மாவட்ட விவசாயிகள் டெல்லி புறப்பட்டு சென்றனர். திருச்சி மாவட்டத்திலிருந்து 20 முன்னோடி விவசாயிகள் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் (அட்மா) வெளி மாநில பட்டறிவு பயணமாக, டெல்லியில் நடை பெறும் அகில உலக வேளாண் மற்றும் தோட்டக்கலை கண்காட்சிக்கு நேற்று ரயில் மூலம் புறப்பட்டுச் சென்றனர். இந்த கண்காட்சி டெல்லி பிரகதி மைதானத்தில் வருகிற 24ம் தேதி வரை நடைபெறுகிறது.

இக்கண்காட்சியில் தொடர் நிகழ்ச்சியாக நடைபெறும் உணவு மற்றும் தொழில்நுட்ப கண் காட்சியையும் விவசாயிகள் நேரில் கண்டு பயன்பெறுகின்றனர். டெல்லி புறப்பட்ட விவசாயிகளை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரும் அட்மா திட்ட இயக்குநருமான சந்திரசேகரன், வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம், உற்பத்தி அலுவலர் ராமநாதன் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர். வேளாண்மை அலுவலர் கலைராணி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இது குறித்து வேளாண் இணை இயக்குனர் சந்திரசேகர் கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் இருந்து ஏற்கனவே 4 விவசாய குழுக்கள் வெளி மாநில பட்டறிவு பயணத்தில் உள்ளனர். தொட்டியம் வட்டாரத்தில் இருந்து 20 விவசாயிகள்

சிறுதானிய உற்பத்தி தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்வதற்காக ஐதராபாத்துக்கும், கால் நடைகளுக்கு செறிவூட்டப்பட்ட தீவனம் தயாரிப்பது பற்றி தெரிந்து கொள்வதற்காக லால்குடி வட்டாரத்தில் இருந்து 20 விவசாயிகள் பெங்களூருக்கும் பட்டறிவுப் பயணம் சென்றுள்ளனர்.

மேலும் காய்கறி உற்பத்தியில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் பற்றி அறிந்து கொள்ள முசிறி வட்டாரத்தில் இருந்து 20 விவசாயிகள் பெங்களூருக்கும், தோட்டக்கலை சாகுபடியில் நீர் மேலாண்மை தொழில் நுட்பங்களை பற்றி அறிந்து கொள்ள அந்தநல்லூரில் இருந்து 20 விவசாயிகள் குஜராத் மாநிலம் வதோதராவிற்கும் பயணம் மேற் கொண்டுள்ளனர் என்றார்.

## எருமை பால்பண்ணை துவங்க அரசு மானியம் விண்ணப்பிக்க அழைப்பு

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் அரசின் மானிய உதவியுடன் எருமை பால்பண்ணை நிறுவும் திட்டத்தை செயல்படுத்த சிறந்த முறையில் கறவை மாடுகள் பராமரிக்கும் விவசாயிகள் வருகிற 27ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அழிந்து வரும் எருமை இனத்தை பாதுகாக்க தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2016-17ம் ஆண்டிற்கு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் எருமை பால்பண்ணை நிறுவும் திட்டம் செயல்படுத்த அரசால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த சிறந்த முறையில் கறவை மாடுகள் பராமரிப்பவர்கள், ஆர்வமுள்ள விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு அலகின் மொத்த மதிப்பு: ரூ,4,32,500 ஆகும். இதில் 75 சதவீதம் அரசின் மானிய தொகையாக ரூ.3,24,375 வழங்கப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் ஒரு பயனாளிக்கு 5 எருமைகள் கொண்ட 6 அலகுகள் (6 பயனாளிகளுக்கு) நிறுவிட அரசு ஆணை பெறப்பட்டுள்ளது. முதற் கட்டமாக 4 (நான்கு) அலகுகளும், இரண்டாவது கட்டமாக 2 (இரண்டு) அலகுகளும் நிறுவப்படும்.

எருமை பால்பண்ணை நிறுவும் திட்டத்திற்கு தேர்வு செய்யப்படும் பயனாளிகளிடம் மாட்டுக் கொட்டகை அமைக்க சொந்தமாக 300 ச.அடி நிலம் இடம் வேண்டும். தீவனப் பயிர் வளர்ப்பதற்கு சொந்தமாக நீர்பாசன வசதியுள்ள 1

ஏக்கர் நிலம் வேண்டும். பயனாளிகள் குறைந்தது 2 ஆண்டுகள் எருமைகளை பராமரிக்க வேண்டும்.கறக்கப்படும் பாலை ஆவின் கூட்டுறவு சங்கத்திற்கு மட்டுமே வழங்க வேண்டும். இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளிகளில் 30 சதவீதம் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்களை திருச்சி மண்டல இணை இயக்குநர் கால்நடை பராமரிப்புத்துறை, கோழிப்பண்ணை வளாகம், புதுக்கோட்டை மெயின் ரோடு, கொட்டப்பட்டு, திருச்சி என்ற முகவரிக்கு வருகிற 27ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும் என கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## நுண்நீர் பாசன பராமரிப்பு பயிற்சி

திண்டுக்கல், : செட்டிநாயக்கன்பட்டியில் அட்மா மற்றும் பிரதம மந்திரியின் விவசாயிகள் நீர் பாதுகாப்புத்திட்டம் சார்பில் விவசாயிகளுக்கான நுண்நீர் பாசன பராமரிப்பு முறைகள் குறித்த பயிற்சி நடைபெற்றது. உதவி தொழில்நுட்ப மேலாளர் சிவக்குமார் வரவேற்றார்.உழவர்பயிற்சி நிலை வேளாண்மை துணை இயக்குநர் பாஸ்கரன், விவசாயிகளுக்கான அரசு திட்டங்கள் குறித்து விளக்கிப் பேசினார். பயிற்சியில் நாளுக்குநாள் தண்ணீரின் அளவு குறைந்து கொண்டே செல்வதால் சிக்கன முறையில் விவசாயத்தை மேற்கொள்வது விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில் அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அருண்குமார், விவசாய நண்பன் பாலகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராமகிருஷ்ணன் நன்றி கூறினார்.

## மானாமதுரையில் பருத்தி சாகுபடி அமோகம்

மானாமதுரை, : மானாமதுரையில் பருத்தி சாகுபடி நல்ல மகசூலைத் தருவதால், நிரந்தரமாக பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம் தாலுகாவில் ஆண்டுதோறும் 500 ஹெக்டேரில்

விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்து வருகின்றனர். நெல்லுக்கு அடுத்தபடியாக பருத்தி விவசாயம் அமோகமாக நடந்து வருகிறது. மானாமதுரை, இளையான்குடி பகுதியில் கரம்பை, சவடுமண் ரகம் அதிகம் காணப்படுவதால் பருத்தி செடிகள் செழிப்பாக வளர்கின்றன.

நெல், கரும்பு, வாழை பயிர்களை விட குறைந்த அளவே நீர்த்தேவை என்பதால் மானாவாரி நிலங்களிலும் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக போதிய மழையின்றி பருத்தி சாகுபடி பரப்பு குறைய துவங்கியுள்ளன. கடந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை பெய்ததால் வைகை பாசனம், கிணறு, கண்மாய்கள் பாசனம் மூலம் விவசாயிகள் நெல் அறுவடைக்கு பின் கோடை பயிராக பருத்தி சாகுபடி செய்து வருகின்றனர்.

விவசாயிகளின் கடும் உழைப்பிற்கு பலனாக கடந்த இரண்டு ஆண்டுகளாக பருத்தியை நட்ட விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைத்து வருகிறது. மானாமதுரை வட்டாரத்தில் கால்பிரவு, பீசர்பட்டினம், சின்னக்கண்ணனூர், சோமாத்தூர், தெ.புதுக்கோட்டை, அயன்குறிச்சி உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் பருத்தி விவசாயம் அமோகமாக நடந்து வருகிறது.

விளைகின்ற பருத்திக்காயைச் செடியில் இருந்து எடுத்து பஞ்சு, கொட்டை, கழிவுகளை நீக்கி சுத்தம் செய்து விற்பனைக்கு கொண்டு செல்லும் போது உரிய விலை கிடைப்பதில்லை என்றும் அரசு நிரந்தரமாக பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து குறிச்சி கிராமத்தை சேர்ந்த ராதா கூறுகையில்," டிசம்பர் மாத இறுதியிலேயே பருத்தி நடவு பணிகள் துவங்கிவிடும். இந்த பகுதி மண்ணுக்கு இயற்கையாகவே நல்ல மகசூல் கிடைப்பதால் மானாமதுரை, இளையான்குடி வட்டாரத்தில் நெல்லுக்கு அடுத்து பருத்தியை அதிகம் நடுகின்றனர். தோல், விதை நீக்கிய பஞ்சு கிலோ ரூ.45 க்கு தான் வியாபாரிகள் வாங்குகின்றனர். கடந்த ஆண்டு இளையான்குடி பகுதியை சேர்ந்த விவசாயிகள் பலர் ஒன்று சேர்ந்து நாமக்கல் பகுதிக்கு கொண்டு சென்று ரூ. 2 கோடிக்கு பருத்தியை விற்றுள்ளனர். பருத்தி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவேண்டுமென்றால் இப்பகுதியில் நிரந்தரமாக பருத்தி கொள்முதல் நிலையம் அமைக்கவேண்டும்" என்றார்.

இது குறித்து வேளாண்மை அலுவலர்கள் கூறியதாவது: சிவகங்கை மாவட்டத்தில் நீண்ட இழை பருத்தி ரகங்கள் சாகுபடி செய்வதில்லை.

அந்த ரகங்களை நடவு செய்ய விரும்பினால் இந்திய பருத்தி கழகம் ஏக்கருக்கு ஆயிரத்து 600 ரூபாய் வீதம் விதை, உரங்கள் வாங்குவதற்கு முன் பணமாக வழங்குகிறது. விவசாயிகள் பருத்தியை விற்பனை செய்யும் போது ஈரப்பதம் 8 சதவிகிதம் இருக்க வேண்டும். அதற்கு மேல் ஈரப்பதம் இருந்தால் விலை குறையும். மற்ற மாவட்டங்களில் உள்ளதைபோல மானாமதுரையில் பருத்தி கொள்முதல் நிலையம் நிரந்தரமாக திறக்கப்பட்டால் இப்பகுதி விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டுக்கு 7 டன் வெண்டைக்காய் வரத்து கிலோ ரூ.10–க்கு விற்பனை



திண்டுக்கல்,

திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டுக்கு, 7 டன் வெண்டைக்காய் வந்தது. அதனால் விலை வீழ்ச்சியடைந்து கிலோ ரூ.10–க்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>காந்தி மார்க்கெட்</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் 2–வது பெரிய மார்க்கெட்டாக திண்டுக்கல் காந்தி மார்க்கெட் விளங்கி வருகிறது. கொடைக்கானல், தாண்டிக்குடி, சிறுமலை போன்ற மலைப்பகுதிகள் மற்றும் திண்டுக்கல்லின் சுற்று வட்டார பகுதிகளில் விளைவிக்கப்படும் காய்கறிகள் இங்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

இங்கிருந்து கேரளா போன்ற வெளிமாநிலங்களுக்கும், சென்னை, திருச்சி உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் காய்கறிகள் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில் வெண்டைக்காய், கொத்தவரை போன்ற காய்கறிகள் கடந்த 19–ந்தேதி அதிகளவில் விற்பனைக்கு வந்தது. அதனால் விலை வீழ்ச்சியடைந்து விற்கப்பட்டதாக வியாபாரிகள் கூறினர். இதுகுறித்து காய்கறி வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

<u>7 டன் வெண்டைக்காய்</u>

கடந்த மாதம் வரத்து குறைவால் வெண்டைக்காய் கிலோ ரூ.30 வரை விற்பனை ஆனது. ஆனால் தற்போது வெண்டைக்காய் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த 19–ந்தேதி ஒரே நாளில் மட்டும் 7 டன் வெண்டைக்காய் மற்றும் 4 டன் கொத்தவரை விற்பனைக்கு வந்தது. அதனால் விலை வீழ்ச்சியடைந்து தலா கிலோ ரூ.10–க்கு விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து வரத்து இருக்கும் பட்சத்தில் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மார்க்கெட்டில், தக்காளி கிலோ ரூ.20–க்கும், கத்தரிக்காய், முருங்கைக்காய், பீட்ரூட், கேரட் தலா கிலோ ரூ.30, பச்சை மிளகாய், சேனைக்கிழங்கு ரூ.40, கருணைக்கிழங்கு, இஞ்சி ரூ.70–க்கும் விற்பனை ஆனது.

**<u>சந்தை நிலவரம், ஆலோசனைகள்…</u>**

வெண்டைக்காயை நடவு செய்த 40 நாட்களில் மகசூல் எடுத்து விடலாம். குறுகிய கால பயிராக இருப்பதால் விவசாயிகள் உடனடியாக லாபத்தை ஈட்டி விட முடியும். அதனாலேயே விவசாயிகள் அதிகளவில் வெண்டைக்காயை பயிரிட்டு விடுகின்றனர். ஒரே சமயத்தில் மகசூல் எடுத்து விற்பனைக்கு கொண்டு வருவதால் எதிர்பார்த்த லாபம் கிடைப்பதில்லை.

இதற்கு மாற்றாக வேறு சில குறுகிய கால பயிர்களை சாகுபடி செய்யலாம். அதற்கு முன்பாக என்ன பயிர்களை சாகுபடி செய்யலாம்? சந்தை நிலவரம் எவ்வாறு உள்ளது? என்பது குறித்த ஆலோசனைகளை பெற வேண்டும் என்பது வேளாண்மைத்துறை அதிகாரிகளின் கருத்தாக இருக்கிறது.